மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இரு துறை அதிகாரிகளின் மூலமாக வழிவகுத்து, நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய அந்த வழக்கை விரைவில் முடித்துத் தருவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்து தருவார்களா என்று தங்கள்மூலமாகக் கேட்டு அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, வழக்கை விரைவுபடுத்தி, அதனை விரைவிலே முடித்து, அந்தக் கோயிலின் வழிபாட்டிற்கு உரிய ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்த வழக்கைத் துரிதமாக முடித்துத் தருவேன் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

179—

இலவச சிகிச்சை

***34394—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், மண்டபம், பாம்பன் பேரூர் பகுதிகளில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச சிகிச்சை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் முகாம் அரசு மருத்துவமனை மற்றும் பாம்பன் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மார்பகப் புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனைகளெல்லாம் செய்யப்பட்டு, புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இராமநாதபுரம் மாவட்ட அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகின்றது.

மேலும், தொற்றில்லா நோய் கண்டறியும் இயக்கம் (Non communicable diseases centre) ஆரம்பிக்கப்பட்டு, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நோயின் தீவிரத்தைப் பொறுத்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்குப் புற்றுநோய் நோயாளிகள் அனுப்பப்பட்டு அங்கேயும் முற்றிலும் இலவச சிகிச்சை வழங்கப்படுகிறது.

தற்பொழுது பொதுவாக புற்றுநோயைத் தவிர்க்க, புகையிலை, புகைப்பிடித்தல், பாக்கு மற்றும் மது ஆகியன தவிர்க்க அறிவுரை வழங்கப்பட்டும் வருகின்றன. புற்றுநோய் பற்றிய விவரங்களை அறியவும், அந்நோயினைக் கண்டறிய அரசு மருத்துவமனையில் உள்ள வசதிகள் குறித்து ஊடகங்கள் மூலமாகவும் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தொகுதியிலே மண்டபம் ஒன்றியம், மண்டபம், பாம்பன் மற்றும் தங்கச்சிமடம், மற்றும் திருப்புல்லாணி ஒன்றியம், பெரியபட்டணத்திலே பரவலாக புற்றுநோய்ப் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இதன் காரணமாகப் பலர் உயிரையும் இழந்திருக்கிறார்கள். சமீபத்தில்கூட தங்கச்சிமடத்தைச் சேர்ந்த 22 வயது வாலிபருக்கு முகத்திலே

2014 ஜூலை 17]

புற்றுநோய் ஏற்பட்டு, அவரை பல தனி நபர்களுடைய உதவியுடன் சென்னைக்குக் கொண்டு வந்தனர். தனியார் மருத்துவமனையில் சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் மருத்துவச் சிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. தற்போது இராமநாதபுரம் அரசு மருத்துவமனைகளிலே கொடுக்கப்படக் கூடிய சிகிச்சையைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்னையிலிருக்கக்கூடிய அடையாறு புற்று நோய் மருத்துவமனையைப் போன்று ஒரு மருத்துவமனையை அந்தப் பகுதியிலே அமைத்துத் தர கேட்டுக்கொள்கிறேன். மொத்த மக்கள் தொகைக்கும் புற்றுநோய் பாதிப்பு பற்றிய screening எடுத்து, இந்த நோயினை முற்றிலுமாக ஒழிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறார்கள். ஒன்று, தனியார் மருத்துவமனையிலே 30 இலட்ச ரூபாய் அளவிற்குச் சிகிச்சை செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கு இந்திய அளவிலே தமிழ்நாட்டிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் புற்றுநோய்க்கென 4 Regional Cancer Research Centres – மண்டல புற்றுநோய் ஆராய்ச்சி மையங்கள் ஒவ்வொன்றும் ரூ.15 கோடி ரூபாய் செலவில் அமைப்பதற்கு விதி 110–ன்கீழ் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஒன்று தாங்கள் சார்ந்திருக்கக் கூடிய பகுதியில் அமைக்கப்படவுள்ளது. மதுரை, திருநெல்வேலி, கோவை மற்றும் தஞ்சாவூர் ஆகிய 4 இடங்களிலும் முழுக்க, முழுக்க மாநில நிதியிலே அமைக்கப்படவுள்ளன. அதற்கான பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டடப் பணிகள் தொடங்குவதற்கு முன்னாலேயே இப்போது அங்கு உயர்தரச் சிகிச்சை முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் AIIMS-க்கு இணையாக உலகத் தரத்திலே உருவாக்கப்பட்டிருக்கிற, பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை—Multi Super Speciality Hospital தொடங்கப்பட்டிருக்கிற 9 பிரிவுகளில்—Surgical Oncology and Medical Oncology-என இரு பிரிவுகள் புற்றுநோய்க்கென பிரத்யேகமாகத்

துவங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி). அங்கேயும் உயர் தர சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் 15 கோடி ரூபாய் மதிப்புள்ள PET-CT என்ற diagnostic equipment மற்றும் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள SPIT என்ற உயர் தர சிகிச்சை equipment ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. தென்னிந்தியாவிலே முதன் முறையாக ஓர் அரசு மருத்துவமனையிலே இதுபோன்ற நவீன வசதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கி, கடைக்கோடியிலே இருக்கக்கூடிய சாமானியனுக்கும், அது எத்தனை இலட்சம் ரூபாயாக இருந்தாலும், முழுக்க முழுக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசால் இலவச சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய காப்பீட்டுத் திட்டமும் இதற்கு உறுதுணையாக இருக்கிறது. தொடங்கப்பட்ட 1,016 சிகிச்சைகளிலே, புற்றுநோய்க்கான 196 சிகிச்சைகள் முற்றிலும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழே cover செய்யப்பட்டு சிகிச்சை இலவசமாக வழங்கப்படுகிறது என்ற நல்ல தகவலை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11—15

Screening செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் 2013—2014 ஆம் ஆண்டையே screening ஆண்டாக அறிவித்தார்கள். தொற்றா நோய் என்று சொல்லக்கூடிய Non-communicable disease-களுக்கு 2013—2014 ஆம் ஆண்டு screening ஆண்டாக அறிவிக்கப்பட்டு, ஒவ்வோர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பயின்று, தேர்ச்சி பெற்ற — trained staff — ஒரு செவிலியர், அரசு மருத்துவமனையிலே இரண்டு செவிலியர்கள், Urban Health Centre என்று சொல்லக்கூடிய முனிசிபல் அளவிலே தேர்ந்தெடுக்கப்பட்ட 100 இடங்களிலே 2 செவிலியர்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே 2 செவிலியர்கள் என முழுமையாக 2,344 பிரத்யேகமான செவிலியர்கள் புற்றுநோய்ச் சிகிச்சைக்கென அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அரசு மருத்துவமனைக்கு வரக்கூடிய நோயாளிகளை மட்டுமின்றி நோயாளிகளோடு வரக்கூடிய attender-களையும் பரிசோதனை செய்யும் இத்திட்டம் மிகச் சிறப்பான முறையிலே இந்தியாவிலேயே தமிழ்நாடு மாநிலத்திலே மட்டும்தான் செயல்படுத்தப்படுகிறது. வேறு எந்த மாநிலத்திலேயும் கிடையாது.

2014 ஜூலை 17]

(மேசையைத் தட்டும் ஒலி) அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரக்கூடியவர்களைப் பரிசோதனை செய்து, அவர்களுக்கு புற்றுநோய்க்கான அறிகுறிகள் இருப்பின், positive சாத்தியக்கூறுகள் இருப்பின், நோயாளிகளின் முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் போன்ற விவரங்கள் பதிவு செய்யப்பட்டு அவர்கள் தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள். முதலில் நோயைக் கண்டறிதல்; இரண்டாவது சிகிச்சை, மூன்றாவது தொடர் கண்காணிப்பு என்ற முறையிலே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் புற்றுநோய்க்கான சிறப்புச் சிகிச்சைகளை, screening வசதியை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், இராமநாதபுரம் தொகுதியிலே இந்தப் பகுதியிலே இன்னும் தீவிரமாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். Blood cancer என்று சொல்லப்படக்கூடிய chronic myelogenous leukemia நோய் பரவலாக மக்களைப் பாதித்து வருகிறது. இந்த blood cancer–ஆல் பாதிக்கப்படக்கூடிய நோயாளிகளை மருத்துவர்கள் Imatinib என்ற ஒரு மாத்திரையை தினமும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள். 30 மாத்திரைகள் கொண்ட ஒரு strip அல்லது ஒரு பாக்கெட் சுமார் 1¼ இலட்சம் ரூபாய்க்கு தனியார் நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகிறது. இந்த குறிப்பிட்ட நிறுவனம் 2013–லே காப்புரிமை கேட்டபோது, உச்ச நீதிமன்றம் காப்புரிமை தருவதற்கு மறுத்துவிட்டது. மேலும், ராஜஸ்தான் மாநிலத்திலே திரு. அசோக் கேலாட் அவர்கள், முதலமைச்சராக இருந்தபோது, தன்னுடைய மாநிலத்திலே blood cancer-ஆல் பாதிக்கப்படக்கூடிய அனைத்து நோயாளிகளுக்கும் இலவசமாக அரசே இந்த மாத்திரையை வழங்கும் என்று அறிவித்தார்கள். அதுபோன்று தமிழக அரசும் தமிழகத்திலே இரத்தப் புற்றுநோயினால் பாதிக்கப்படக்கூடிய அனைத்து நோயாளிகளுக்கும் Imatinib மாத்திரையை இலவசமாக

வழங்குவதற்கு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு மேற்கண்ட கருத்து எடுத்துச் செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு இரண்டு பெரிய மானியங்கள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். (குறுக்கீடுகள்) 12 உறுப்பினர்கள் பேச வேண்டும். எல்லோரும் கொஞ்சம் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) என்ன? சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டத் தொடர் தொடங்கிய நாளிலிருந்து பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துறைக்கு எல்லாவற்றையும் பதிலுக்காக அனுப்பி இருக்கிறோம். பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன். ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நான்கு நாட்கள் ஆகின்றன. சபை ஆரம்பித்து நான்கு, ஐந்து நாட்கள்தான் ஆகின்றன. துறையிலேயிருந்து இன்னும் பதில் வரவில்லை. வந்தவுடனே ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, வந்தவுடனே*